[1973 பிப்ரவரி 12

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்தப் பாலத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? அதை அங்கேயுள்ள மக்கள் பெரிதும் எதிர்ப்பார்க்கிறார்கள் என்ற காரணத்தால், அந்தப் பணியை விரைவில் இந்த நிதி ஆண்டிலேயே ஏற்று நடத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அந்த பாலத்திற்காக திட்டமிடப்பட்ட நேரத்தில் அதன் மதிப்பீடு ரூ. $4\frac{1}{2}$ லட்சம். இப்போது அந்தத் திட்டத்திற்கு ரூ. 9 லட்சமாக உயர்ந்து இருப்பதாக அறிய வருகிறது. அதிலே இருக்கும் பிரச்னை என்ன வென்றால் இந்திரா நகரில் ஒரு வீட்டு மனை ரூ. 4,500 என்று விற்கப் பட்டிருக்கிறது. அது கையகப்படுத்தப்பட்ட நிலையில் ரூ. 6,500 என்று விற்கப்பட்டு வருகிறது. அந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக ஆகும் செலவை அங்கே குடியிருப்பவர்கள் அனைவரும் சமமாகப் பங்கு போட்டுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை அவர்கள் ஒப்புக்கொள்ளாத காரணத்தாலும், வீட்டு வசதி வாரி யத்தால் இவ்வளவு பெரிய செலவை ஏற்க முடியாத காரணத்தாலும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, 9 லட்சம் ரூபாய் அங்கே குடியிருப்பவர்களிடமிருந்து வாங்க முடியாது என்ற காரணத் தால் அந்தப் பாலத்தைக் கைவிடுவது சரியா? அந்தப் பாலத்தின் மீது போகும் வண்டிகளிடமிருந்து ஏதேனும் கட்டணம் வசூலிப்பதன் மூலம் அந்தத் தொகையை ஈடுசெய்து கொள்ளலாம் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பாலத்தின் மீது செல்லும் அந்த வண்டிகளும் அந்த வீட்டிற்குத்தான் செல்லும். ஆகவே, வண்டிகளிடமிருந்து வாங்கினாலும், அங்கே வசிப்போரிடமிருந்து வாங்கினாலும் இரண்டும் ஒன்றுதான். பக்கிங்ஹாம் கால்வாயில் கட்டப்படும் பாலத்திற்கு அரசு 60 சதவிகிதம் கொடுக்க வேண்டு மென்றும், மாநகராட்சி மீதமுள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொன்ன நேரத்தில், மாநகராட்சி அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகு அரசு அவ்வளவு பெரிய தொகையைத் தருவது, வீட்டு வசதி வாரியம் தனியான முறையில் அவ்வளவு பெரிய தொகையைச் செலவு செய்வது